செ.வெ.எண்: 392/2016 நாள்: 22.06.2016

# டெங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களின் விழிப்புணர்வு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரின் நாளிதழ் செய்திக்குறிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால் டெங்கு காய்ச்சல் பரவுவதற்க்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ள காரணத்தினால் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு உள்ளாட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பொது சுகாதாரத்தை பேணும் முறைகள் பற்றி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்டுள்ள துறை அலுவலர்களுக்கு கீழ்கண்டவாறு அறிவுரை வழங்கியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்ட உள்ளாட்சி பகுதிகளில் தேங்கியுள்ள குப்பை மற்றும் கழிவுகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும். கழிவுநீர் செல்லும் வாய்க்கால்கள் மற்றும் ஒடைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்பட வேண்டும். தண்ணீர் தேங்கி கிடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வீடு வீடாக டெங்கு பாதுகாப்பு நடவடிக்கை குறித்து தெரிவிக்க வேண்டும். வீடுகளில் தேவையின்றி இருப்பு வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் / தண்ணீர் பாட்டில்கள் / சைக்கிள் டயர்கள் / சிரட்டைகள் அகற்றி / அழிக்கப்பட வேண்டும். உள்ளாட்சி பகுதிகளில் அனைத்து நீராதாரங்கள் அதாவது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி / தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் / சின்டெக்ஸ் / தெரு நல்லிகள் ஆகியவை பிளிச்சீங் பவுடரினால் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

சுகாதாரதுறையுடன் இணைந்து கொசு மருந்து அடித்தல் உள்ளிட்ட சுகாதார பணிகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த ஆண்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். மகளிர் சுகாதார வளாகங்களில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிகள் கொசு புழுக்களின்றி சுத்தம் செய்யப்பட வேண்டும். பள்ளியில் பயிலும் குழந்தைகள் காய்ச்சலினால் விடுப்பு எடுத்தால் அவ்வாறான குழந்தைகளின் வீடுகளை சுற்றிலும் தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள ஆசிரியர்கள் மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

கிராம ஊராட்சி பகுதிகளுக்குட்பட்ட சுகாதார பணிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களை முழு பொறுப்பாக்கி உத்தரவிடப்பட்டுள்ளது. உள்ளாட்சி பணியாளர்களை கொண்டு தூய்மைப்படுத்தப்படும் பணி (Mass cleaning) முழுவீச்சில் மேற்கொள்ளப்பட வேண்டும். மண்டல அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கள் களப்பணியின் போது இது

குறித்து தவறாமல் ஆய்வு செய்து ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை நல்க வேண்டும்.

சுகாதார துறையால் கொசு மருந்து அடித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் போது உள்ளாட்சி பணியாளர்களும் இணைந்து இப்பணிக்கு தேவையான ஒத்துழைப்பு நல்க வேண்டும். உள்ளாட்சிகள் முழுவதிலும் தெருக்களில் கழிவுநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். தெருக்கள், மக்கள் கூடுமிடங்கள் மற்றும் உள்ளாட்சி பகுதி முழுவதிலும் சேரும் குப்பைகள், கழிவுகளை சுகாதாரப் பணியாளர்களை கொண்டு உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். தண்ணீர் மூலமாக கொசு உற்பத்தியாவதால் தண்ணீர் தேங்கா வண்ணம் உடனுக்குடன் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் புதிதாக 20 மஸ்தூர்கள் நியமனம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சுகாதாரபணிக்கென நியமிக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அலுவலர்கள் மற்றும் மஸ்தூர்கள் அடங்கிய குழுவானது தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுகாதார பணிகளின் தொடர்ச்சியாக வீடுகளில் ஆய்வு செய்ய வரும்போது அவர்களுக்கு தகுந்த ஒத்துழைப்பு வழங்கவும் மேற்படி அலுவலர்கள் தெரிவிக்கும் டெங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடாபான கருத்துக்களை உடனடியாக நடைமுறைபடுத்துவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் டெங்கு நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கவும் இதற்கு தகுந்த ஒத்துழைப்பு வழங்கி முழு மனதுடன் இதில் பங்கேற்கவும் பொது மக்கள் மற்றும் அனைத்து அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.